// DIEU ET MON DROIT //

# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,936 — 1932 ம் ஹு ஆடிமீ 22 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV. நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

No. G 166.

"நாய்களைப் பதிவுசெய்தலைப்பற்றிய 1901 ம் ஆண்டுச் சட்டம்."

நுவரெலியா டிஸ்திறிக் பிரிவிலுள்ள எல்லாச் சௌக்கியாதார சங்கப் பட்டணங்களின் விஷயத்திலும் நாய்களைப் பதிவுசெய்தலைப்பற்றிய 1901 ம் ஆண்டின் 25 ம் இலக்கச் சட்டத்தின் 5 ம் பிரிவின் ஏற்பாடுகளின்படி நுவரெலியா டிஸ்திறிக் பிரிவுச் சௌக்கியாதார சங்கத் தலைவரால் உண்டாக்கப்பட்ட உபவிதிகள்.

நுவரேலியா டிஸ்திறிக் பிரிவிலுள்ள சௌக்கியாதார சங்கப் பட்டணங்கள் 1902 ம் ஹு (எப்றில்) சித்திரைமீ 18 ந் தேதியைக் கொண்ட 5,845 ம் இலக்க கவண்மேந்துக் "கசெற்" பத்திரிகையில் வெளியரங்கப்படுத்தப்பட்ட 1902ம் ஹு (எப்றில்) சித்திரைமீ 14 ந தேதியைக்கொண்ட பிரசித்தத்தினல் மேற்சொல்லிய சட்ட வழக்கத்துக்குட்பட்டன வாக்கப்பட்டிருக்கின்றன.

டபிள்யு. ஜே. எல். றேஜர்சன்,
நுவரெலியாச் சௌக்கியாதார சங்கத்தலைவர்.

நுவரெலியா,
1932 ம் ஹு ஜூன்மீ 15 ந் தேதி.

உபவிதிகள்.

1. நுவரெலியா டிஸ்திறிக் பிரிவிலுள்ள எந்தச் சௌக்கியாதார சங்கப் பட்டண எல்லைக்குள்ளும் வளர்த்துவரப்படும் ஒவ்வொரு ஆண் நாய்க்கும் அல்லது பெண் நாய்க்கும் அந் நாயைத் தம்பொறுப்பில் அல்லது வசத்தில் வைத்திருப்பவர் ரூபா 1 சதம் 50 வருடாந்தப் பதிவு வேதனமாகக் கொடுத்தல் வேண்டும். இந்த விதானத்தின் நோக்கத்திற்காக ஒரு வருஷ காலம் ஒரு வருஷம் ஏப்றில் மாசம் 1 ந் தேதியிலிருந்து அடுத்த வருஷம் மார்ச் (பங்குனி) மாசம் 31 ந் தேதி வரையிலும் செல்வதாகக் கணக்கிடப்படும்.

2. பட்டண எல்லைக்குள் உள்ள ஒவ்வொரு வீட்டுக்காரனும் ஒவ்வொரு வருஷத்திலும் (ஜனுவரி) தைமாசம் 31 ந் தேதிக்குமுன் (இதன்பின்னர் பணஞ் சேர்ப்பவர் என்று சொல்லப்படுபவர்) ஆகிய பதிவு வேதனம் சேர்ப்பதற்கென்று சௌக்கியாதார சங்கத்தலைவரால் ஏற்படுத்தப்பட்டவருக்கு அவ்வீட்டில் அல்லது அதற்குச்சேர்ந்த வளவில் வளர்த்துவரப்படும் ஒவ்வொரு ஆண் நாயையும் அல்லது ஒவ்வொரு பெண் நாயையும் குறித்து இதனோடிணைத்திருக்கும் "A" அட்சர மிடப்பட்ட மாதிரிப் பத்திரத்தில் கேட்டிருக்கும் விவரங்களை எழுதிக் கொடுத்தல் வேண்டும்.

3. மேற்சொல்லிய பணஞ் சேர்ப்பவரிடம் விதித்திருக்கும் வேதனம் கொடுத்தவுடன் "B" அட்சர மிடப்பட்ட பத்திரமாதிரியாக ஒரு பதிவுச் சாட்சிப்பத்திரம் கொடுக்கப்படல் வேண்டும்

4. பணஞ் சேர்ப்பவர் (1) (a) தமது அபிப்பிராயப்படி மற்ற நாய்களுக்கு அதற்குள்ள நோய் தொற்றக்கூடிய அளவுக்கு நோய் பிடித்திருக்கிற அல்லது (b) வயசினல், வருத்தத்தினல் அல்லது காயப்பட்டிருப்பதினல் இனி உயிரோடு வைத்திருக்கத் தகுந்ததல்லவென்று தாம் எண்ணுகிற எந்த ஆண் நாய்க்கேனும் பெண் நாய்க்கேனும் ஒரு பதிவுச் சாட்சிப்பத்திரம் கொடுக்க மறுக்கலாம்; அல்லது (2) தாம் ஏற்றனவென்றெண்ணும் நிபந்தனைகள் எவைகளுக்கும் அமைவாக அச்சாட்சிப்பத்திரம் கொடுக்கலாம். அம்மறுப்புடன் அல்லது நிபந்தனைகளுடன் திருப்திப்படாத எந்தச் சொந்தக்காரனும் சௌக்கியாதார சங்கத் தலைவரிடம் அப்பீல் முறையீடு செய்துகொள்ளலாம், அவர் அதை உறுதிப்படுத்தலாம், மாற்றலாம் அல்லது அழித்துவிடலாம்.

5. ஒவ்வொரு பதிவுச் சாட்சிப்பத்திரத்திலும் பின்வரும் நிபந்தனைகள் அச்சிட்டிருத்தல் வேண்டும், அவைகளாவன :—

(a) சங்கத்தலைவரின் அபிப்பிராயப்படி உயிரோடிருக்கத் தகாததென்று காணக்கூடிய பிரகாரம் நாய் முடமாய் அல்லது நோய்பிடித்ததாய் வந்துவிட்டால்; அல்லது (a) நாயை அதின் சொந்தக்காரன் வழக்கமாகக் குரூரமாய் நடத்துகிறார் அல்லது கவனியாது விட்டுவிடுகிறார் என்று சங்கத்தலைவர் திருப்திப்பட்டுக்கொண்டால்; அல்லது c) நாய்க்கு ஒரு பரம்பும் நோய் அல்லது தொத்துநோய் பிடித்திருக்கும்போது அதின் சொந்தக்காரன் அதை மற்றவர்களுக்குரிய நாய்களுடன் கூடித்திரியவிட்டால்; இச் சாட்சிப்பத்திரம் சௌக்கியாதார சங்கத்தலைவரால் அழித்துவிடப்படுவதற்கு ஏதுவாகும்.

6. எந்த ஆண் நாயின் விஷயத்திலேனும் எந்தப் பெண் நாயின் விஷயத்திலேனும் (a) ஒரு சாட்சிப்பத்திரம் கொடாது மறுக்கப்படுமிடத்து அல்லது (b) அத்துடன் சேர்க்கப்பட்டுள்ள ஒரு நிபந்தனை அனுசரிக்கப்படாதிருக்குமிடத்து அந்த ஆண் நாயை அல்லது பெண் நாயைத் தம் பொறுப்பில் அல்லது வசத்தில் வைத்திருப்பவர் சௌக்கியாதாரப் பரிசோதகரின் கந்தோருக்கு அந்நாயைக் கொண்டு வரும்படி அறிவித்தல் மூலம் கேட்கப்படும்போது அவ்வறிவித்தலிற் குறித்திருக்கும் நேரத்தில் அவ்வண்ணம் அதைக் கொண்டுவந்து அதை ஒப்புக்கொள்ளும்படி அதிகாரம்பெற்ற சௌக்கியாதார சங்க உத்தியோகஸ்தர் ஒருவரிடம் அதை ஒப்புவித்தல் வேண்டும். அப்படி ஒப்புவிக்கப்பட்ட நாய்களின் விஷயத்தில் அதன்பின் சங்கத்தலைவர் தீர்மானிக்கும் வண்ணமாகச் செய்துவிடுதல் வேண்டும்.

"A" அக்ஷர மாதிரிப் பத்திரம்.

நாய்களைப்பற்றிய உபவிதிகளின்படி முடித்துக்கொடுக்க வேண்டிய அட்டவணைக் கணக்கு.

வீட்டு இலக்கம் :————

தெரு :————

வீட்டுக்காரன் பெயர் :————

| வளர்க்கும் நாய்களின் தொகை | விவரம் | | | | | சொந்தக்காரன் பெயர் | பணம் கட்டிய தேதி |
|---|---|---|---|---|---|---|---|
| | சாதி | ஆணோ பெண்ணோ | நிறம் | கழுத்தளவு | விசேஷ குணங்கள் | | |
| | | | | | | | |

————

வீட்டுக்காரனின் கையொப்பம்.

ஒப்புவித்த தேதி.

நுவரெலியா, 19 —— ம் ௵ ———— மீ —— ந் தேதி.

மேற்சொல்லிய வீட்டுக்காரன் ஒரு கிழமைக்குள் மேலே காணும் அட்டவணையை எழுதி நிரப்பி அனுப்பி வைக்கவேண்டுமென்று இதனால் கேட்கப்படுகின்றது. அப்படிச் செய்யாது விட்டுவிடும் எவரும் ரூபா 20 தெண்டம் இறுப்பதற்கு இடமானவர் ஆவர்.

————

சங்கத்தலைவர்.

நுவரெலியாக் கச்சேரி,
19 —— ம் ௵ ———— மீ —— ந் தேதி.

"B" அக்ஷர மாதிரிப் பத்திரம்.

நாய்களைப் பதிவு செய்ததைப்பற்றிய சாட்சிப் பத்திரம்.

தெரு :————.

பதிவு செய்த இலக்கம் :————.

———— ம் இலக்கத்தைக்கொண்ட தமது வீட்டில் வசிக்கும் ———— என்பவர் இன்று இக்கந்தோரில் கீழே காணும் விவரங்களையுடைய ஒரு ஆண் நாயை / பெண் நாயைப் பதிவுசெய்திருக்கிறாரென்றும் அதற்காக ரூ.———— பதிவுச் சலார் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் இதனால் உறுதிமொழி எழுதப்படுகின்றது.

நாயின் விவரம்.

சாதி :————.

ஆணோ பெண்ணோ ————.

நிறம் :————.

கழுத்தளவு :————.

விசேஷ குணங்கள் :————.

இச்சாட்சிப்பத்திரம் 19 —— ம் ௵ மார்ச் (பங்குனி) மாசம் 31 ந் தேதி வரையிலும் பெலப்புடையதாயிருக்கும்.

————

சங்கத்தலைவர்.

நுவரெலியாக் கச்சேரி,
19 —— ம் ௵ ———— மீ —— ந் தேதி.

---

## காணி விற்பனவு.

**Jaffna No. 43.**—1932 ம் ஆண்டு புரட்டாதிமீ 5 ந் திகதி திங்கட்கிழமை 10 மணிக்கு, சாவகச்சேரி வாடி வீட்டில் வடமாகாணத்து கவர்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகள், அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீர்ந்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும்.

40 காணித்துண்டுகள், வட மாகாணத்து பச்சிலைப்பளி-கரைச்சி தென்மராட்சிப் பகுதிகளிலிருக்கின்றன.

கரைச்சி-பச்சிலைப்பளி பகுதி.

பிளான் இலக்கம் 7,765. குறிச்சி—செம்பியன்பற்று. உரித்தாளி—இல்லை.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | கடல்கரைமணல் .. | பேதுறுப்பிள்ளை அந்தோனி | தரிசுநிலம் .. .. | 1 | 1 | 25 | 20 |

பிளான் இலக்கம் 7,979. குறிச்சி—கோரக்கன் கட்டு. உரித்தாளி—இல்லை.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | பாலையடிவயல் .. | வயிரவி வேலுப்பிள்ளை | பற்றைக்காடு .. .. | 5 | 1 | 20 | 21 |
| 3 | ஷை .. | — .. | பன்னைக்கண்டி, ஆற்றுக்காக விடப்பட்ட நிலம் | 2 | 2 | 11 | —* |

பிளான் இலக்கம் 7,980. குறிச்சி—உடுத்துறை, உரிததாளி—இல்லை.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மணல்காடு .. | — .. | பாதைக்காக சேமிக்கப்பட வேண்டிய நிலம் | 0 | 0 | 6 | —* |
| 2 | ஷை .. | அருணசலம் முத்துவால் | தோட்டம் கூட்டப்பட்டது .. .. | 0 | 0 | 15 | 20† |

உரித்தாளி.—வயிரமுத்துவும் பெண் சின்னச்சியும்.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | கடல்கரைமணல் .. | விநாசித்தம்பி முருகுப்பிள்ளை | 51 பனைகளுள்ள தரிசுநிலம் .. | 0 | 1 | 34 | 60† |

பிளான் இலக்கம் A. E. 6/B. S. P. P. 41 குறிச்சி—தட்டுவன் கொட்டி. உரித்தாளி—இல்லை.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 11c | தட்டுவன்கொட்டிகாடு .. | மூத்தர்பொன்னையா .. | புகையிலை செய்யக்கூடிய தரிசு நிலமும் பற்றைக்காடும் | 4 | 3 | 3 | 25 |

தென்மராட்சிப் பகுதி.

பிளான் இலக்கம் 5,925. குறிச்சி—கைதடி நுணாவில். உரித்தாளி—இல்லை.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கண்டதுவயல் .. | சின்னத்தம்பி வல்லிபுரம் | வெளி நிலம் .. .. | 1 | 0 | 21 | 40 |

பிளான் இலக்கம 7,159. குறிச்சி—மிருசுவில். உரித்தாளி—இல்லை.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | முந்தன்புலோவும், தரும்பன்தறையும் | — .. | பனைகளுள்ள பற்றைக்காடு .. | 22 | 0 | 36 | 40 |
| 2 | முந்தன்புலோ .. | — .. | ஷை .. .. | 6 | 0 | 31 | 40 |
| 3 | மாவிலங்கன்பள்ளம் .. | — | பற்றைக்காடு .. .. | 4 | 2 | 23 | 40 |
| 4 | ஷை .. | — .. | பனைகளுள்ள பற்றைக்காடு- .. | 4 | 0 | 13 | 40 |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம் ஏ. | று. | ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | மஞ்சன்மடம் .. | — .. | பனைகளுள்ள பற்றைக்காடு .. | 1 | 0 | 21 | 40 |
| 6 | குருமான்கண்டி .. | — .. | ஷை .. .. | 1 | 0 | 27 | 40 |
| 7 | குருமான்கண்டி குளன் கரை | — .. | ஷை .. .. | 3 | 3 | 21 | 40 |
| | பிளான் இலக்கம் 7,964. குறிச்சி—கரம்பகம். உரித்தாளி—இல்லை. | | | | | | |
| 1 | பள்ளக்காடு .. | எஸ். சின்னப்பு .. | பற்றைக்காடு .. .. | 6 | 0 | 23 | 80 |
| 2 | — .. | — .. | பாதைக்காக சேமிக்கப்பட வேண்டியது | 0 | 0 | 39 | —* |
| 3 | வேரைகல்தோட்டம் .. | கந்தையனும் மறுபேராலும் கூட்டப்பட்ட நிலம் | தென்னந்தோட்டம் .. | 0 | 3 | 1 | 160† |
| | பிளான் இலக்கம் 7,974. குறிச்சி—கைதடி. உரித்தாளி—இல்லை. | | | | | | |
| 2 | காண்டைக்காடு .. | எஸ். சரவணமுத்துவும், கே. வயித்திலிங்கமும் | தரிசுநிலம் .. : | 3 | 3 | 33 | 160 |
| | பிளான் இலக்கம் 8,272. குறிச்சி—கெற்பெலி. உரித்தாளி—இல்லை. | | | | | | |
| 1 | தென்பி .. | — .. | பாதைக்காக சேமிக்கப்பட வேண்டியது | 0 | 1 | 1 | —* |
| 2 | ஷை .. | சின்னத்தம்பி நாக முத்து | பற்றைக்காடு .. | 5 | 0 | 7 | 80 |
| | பிளான் இலக்கம் 8,296. குறிச்சி—வரணி-இயத்தாலை. உரித்தாளி—இல்லை. | | | | | | |
| 1 | தறவை .. | எஸ். சிதம்பரன் .. | தரிசு நிலம் .. .. | 10 | 0 | 19 | 72 |
| | பிளான் இலக்கம் 7,532. குறிச்சி—மீசாலை வடக்கு. உரித்தாளி—இல்லை. | | | | | | |
| 2 | கொட்டியல்கும்பான் .. | வேலுப்பிள்ளை சரவண முத்து | தரிசு நிலம் .. .. | 1 | 1 | 10 | 480 |
| | பிளான் இலக்கம் 7,978. குறிச்சி—மீசாலை வடக்கு. உரித்தாளி—அருணாசலம் பெண் தெய்வானை. | | | | | | |
| 1 | கொட்டியல்கும்பான் அல்லது மதளைதோட்டம் | — .. | தோட்டம் .. .. | 0 | 1 | 2 | 480 |
| | உரித்தாளி—சுப்பிரமணியர் வைத்திலிங்கம். | | | | | | |
| 2 | ஷை .. | — .. | தோட்டமும் தரிசுநிலமும் .. | 0 | 1 | 29 | 480 |
| | உரித்தாளி—இல்லை. | | | | | | |
| 3 | கொட்டியல்கும்பான் .. | — .. | தரிசு நிலம் .. .. | 1 | 3 | 16 | 480 |
| 4 | ஷை .. | — .. | தரிசு நிலம், பாதைக்காக சேமிக்கப்பட வேண்டியது | 0 | 2 | 11 | —* |
| 5 | ஷை .. | வி. பொன்னையா .. | தரிசுநிலம் .. .. | 2 | 3 | 33 | 480 |
| 6 | ஷை .. | ஷை .. | தரிசு நிலம் .. .. | 2 | 0 | 28 | 480 |
| 7 | ஷை .. | — .. | பாதைக்காக சேமிக்கப்படவேண்டிய நிலம் | 0 | 2 | 28 | —* |
| 8 | ஷை .. | — .. | தரிசு நிலம் .. .. | 2 | 1 | 28 | 480 |
| | உரித்தாளி—சுப்பிரமணியர் வைத்திலிங்கம். | | | | | | |
| 9 | கொட்டியல்கும்பான் அல்லது மதளைதோட்டம் | — .. | தரிசு நிலமும் தோட்டமும் .. | 0 | 2 | 38 | 480 |
| | உரித்தாளி—இல்லை. | | | | | | |
| 10 | கொட்டியல்கும்பான் .. | — .. | பாதைக்காக சேமிக்கப்படவேண்டியது .. | 1 | 1 | 37 | —* |
| 11 | ஷை .. | — .. | கல்லுக்கிடங்குக்காக சேமிக்கப்படவேண்டியது | 1 | 3 | 31 | —* |
| 12 | ஷை .. | — .. | ஷை .. .. | 1 | 2 | 39 | —* |
| 13 | ஷை .. | — .. | தரிசு நிலம் .. .. | 2 | 1 | 31 | 480 |
| 14 | ஷை .. | — .. | கல்லுக்கிடங்குக்காக சேமிக்கப்படவேண்டியது | 2 | 0 | 22 | —* |
| 15 | ஷை .. | எஸ். சோமசுந்தரம் .. | தரிசு நிலம் .. .. | 1 | 3 | 14 | 480 |
| 16 | ஷை .. | — .. | ரோட்டுக்காக சேமிக்கப்படவேண்டியது | 0 | 0 | 10 | —* |
| 17 | ஷை .. | — .. | ஷை .. .. | 0 | 0 | 37 | —* |

* விற்பனவுக்கல்ல.
† உரித்தாளருக்கு மதிப்பு விலையில் தீர்ந்து விடப்படும்.

இக்காணிகளைப்பற்றிய மறுவிபரங்கள் வடமாகாண ஏசண்டரிடமிருந்தும் படங்கள் அளவுகந்தோர் தலைவரிடமிருந்தும் பெறுதுகொள்ளலாம்.

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1932 ம் ஆண்டு ஆடிமீ 19 ந் திகதி.

சி. வி. பிறேயின்,
காணிக் கொம்மிஷனர்.

---

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵ த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் புலோலி மேற்கில் ஓர் சந்தை திறப்பதாகிய பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 8,028. குறிச்சி—புலோலி மேற்கு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | உசனை .. | பறட்டைகாணி .. | புலோலி மேற்கு சுப்பிரமணியம் கந்தையா, வி. ஆறுமுகம் பெண் பொன்னாச்சி, கே. கதிர்காமதம்பிலகம் பெண் பாருபதிப்பிள்ளை, என். விநாசிதம்பி கைம்பெண் வள்ளிப்பிள்ளை, குமாரசாமி வேலாயுதர் மற்றவர்களும் | 0 | 1 | 7·50 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ௵ ஆவணி மாசம் 16 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு பரித்தித்துறை வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படிக்கும் அக்காணியைப்பற்றிய உறுதிகளைக் கொண்டுவந்து காட்டும்படிக்கும் இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

யாட்பாணக் கச்சேரி,
1932 ம் ௵ ஆடி ௴ 11 ந் ௳.

சீ. ரீ. டைசன்.
வடமாகாண அரசாட்சி ஏசண்டு

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் முல்லைத்தீவு, கரைச்சிக் குடியிருப்பில் ஒரு கக்கூசு கட்டுவதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 3,189. குறிச்சி—முல்லைத்தீவு, சுகாதாரசங்க எல்லைக்குள்

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 2 | பூமாக்குளத்தடியில் தென்னந்தோட்டம் | பனைமரத்தோட்டம், 50 வருடங்கள் சென்ற 7 பனைமரங்களை அடக்கியுள்ளது | (1) பொன்னம்பலம் கநதையா, (2) பொன்னம்பலம் நல்லையா, (3) செல்லையா சின்னத்தம்பி, (4) செல்லையா கணபதிப்பிள்ளை, (5) செல்லையா தம்பையா, (6) செல்லையா பாறுவதிப்பிள்ளை, (7) செல்லையா வள்ளிநாயகி | 0 0 1·64 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ௵ ஆவணி மாசம் 31 ந் தேதியிலன்று 11 மணிக்கு முல்லைத்தீவுக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது. 1932 ம் ஆண்டு தை ௴ 29 ந் திகதியைக்கொண்ட அரசாட்சியாரின் 7,903 ம் இலக்க கசெற் பத்திரிகையில் வெளிப்பட்ட 1932 ம் ஆண்டு தை ௴ 26 ந் திகதியைக்கொண்ட அரசாட்சியாரின் தேவைக்காக எடுக்கப்பட்ட இந்த நொத்தீசிற் சொல்லப்பட்ட காணித் துண்டைப்பற்றிய விளம்பரம் இத்தால் அழிக்கப்பட்டிருக்கிறது.

முல்லைத்தீவுக் கச்சேரி,
1932 ம் ௵ ஆடி ௴ 11 ந் ௳.

ஆர். எஸ். வி. புலியர்,
அரசாட்சி உதவி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மட்டக்களப்பு டிஸ்திறிக்கில் எருவில் என்னும் கிராமத்தில் சுடலைக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 6,787. குறிச்சி—எருவில்.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | ஈஸ்டர் சீற்றன் தோட்டம் .. | காடு .. | ஈஸ்டர் சீற்றன் தென்னந்தோட்டம் கம்பெனியார் | 1 3 26 |
| 2 | ஷை .. | காடு .. | ஷை .. | 0 0 12 |
| | | | | 1 3 38 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ௵ ஆவணி மாசம் 27 ந் தேதியிலன்று சனிக்கிழமை காலை 11 மணிக்கு மட்டக்களப்பு கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மட்டக்களப்புக் கச்சேரி,
1932 ம் ௵ ஆடி ௴ 16 ந் ௳.

ஏ. என். ஸ்றேங்,
கீழ் மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பொல்காவலை—அலவ்வ றோட்டைத் திருத்துதல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

463 ம் இலக்கக் கடைசிக் கிராமப்படத்து 1 ம் இலக்க அநுபந்தம். குறிச்சி—வடமேல் மாகாணத்தில் குருநாக்கல் டிஸ்திறிக்கில் தம்பதெனி ஹற்பத்துவில் உடுக்ககோறளை தெற்கில் உள்ள அலவ்வ.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 105c | அஸ்வெத்துமகும்புற .. | நெல்வயல் .. | அலவ்வவைச்சேர்ந்த மாப்பகுணகய லாகே புஞ்சி அப்புகாமி | 0 0 3·1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.